# உறவே நீ பேசு

புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை

செப்டம்பர் 2025 உறவு 74



# அன்பு சகோதரிகளே!

செப்டம்பர் மாதம் என்றாலே அன்னை மரியாளின் பிறப்பு விழா கொண்டாட்டத்தில் ஆரோக்கிய அன்னையின் ஆசீரை வேண்டும் மாதமாக சிறப்பிக்கிறோம். குழந்தை மாதாவின் பிஞ்சு கர ஆசீர் தந்து செபிக்கிறேன்.

மேலும் ஆசிரியர்களை நினைவு கூர்ந்து நன்றி கூறி பாராட்டும் ஆசிரியர் தினமும் இம்மாதமே. கல்வி என்பது வெறும் அறிவை மாற்றுவது மட்டுமல்ல, குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தன்னையே கொடுப்பதை உள்ளடக்கிய உண்மையான அன்பு மற்றும் பணியின் செயல். அத்தகைய மகத்தான உன்னத கல்விப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் அனைத்து ஆசிரிய சகோதரிகளுக்கும், இருபால் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களும்! பாராட்டுக்களும்! உங்களின் தன்னலமற்ற சேவைக்கு சபை நிர்வாகம் மனதார நன்றி சொல்கிறது.

“சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோர்க்கே உரியது” (மாற் 10:14) என்றார் இயேசு.



எனவே இயேசுவின் ஆசி பெற்றால் நலமாய் வாழ்வர் என்ற நம்பிக்கையில் குழந்தைகளைப் பெற்றோர் அழைத்து வந்தனர். குழந்தைகளுக்கான வளர்ச்சியில் தடையிடுவோரை இயேசு பொறுத்துக்கொள்ளவில்லை. சீடர்களிடம் கடுஞ்சினத்தை வெளிப்படுத்துகின்றார். அவரது கோபத்தில் குழந்தைகளின் முக்கியத்துவம், முன்னேற்றம், மகிழ்ச்சி, சுதந்திரம், போட்டியின்மை, ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றோடு அவர்கள் வழிகாட்டப்பட வேண்டியவர்கள், கரிசனைக்குரியவர்கள் என்ற கண்ணோட்டங்கள் கண்ணாடியாயின. இறையாட்சிப் பாதையில் எப்படிப்பட்ட சமூகம் உருவாக விரும்புகின்றோமோ அப்படி குழந்தைகளை உருவாக்குவது நம் பெருங்கடமை. குழந்தைகளிடம் மணலளவு அன்பைக் காட்டினால் மலையளவு அன்பைக் கொட்டுவார்கள்.

ஆசிரியர்கள் கண்டுகொள்ளப்படாத குழந்தைகளைக் கொண்டாடி பாசம் காட்டினால் தாயன்போடு அரவணைத்தால் நாளைய தலைமுறை மனிதநேயமுள்ள தலைமுறையாக வளரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இன்றைய இளம் மாணவப்பருவம் அமைதிக்கான பாதை, மற்றவர்கள் மீது அக்கறை கொள்வதில் பயிற்சி பெற்ற இதயங்களையும் மனங்களையும் விரும்பி கோருகிறது, மேலும் இன்றைய உலகில் பொது நன்மையை உணரும் திறன் கொண்டதாக இளையோர் உள்ளனர். ஏனென்றால் அமைதிக்கான பாதை அனைவரையும் உள்ளடக்கியது மற்றும் அனைத்து உயிரினங்களுக்கிடையில் சரியான உறவுகளை வளர்ப்பதற்கு வழிவகுக்கிறது.

### அமைதி அனைவருக்கும் சொந்தமானது:

அமைதி என்பது ஒரு பிரிக்க முடியாத நன்மை, அது அனைவருக்கும் சொந்தமானது. மக்களின் மனச்சான்றுகளில், பொது நன்மைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள உறுதியான மற்றும் விடாமுயற்சியுடன் கூடிய உறுதிப்பாடு இருந்தால் மட்டுமே, அமைதியை உண்மையிலேயே அடையவும், வாழ்க்கையின் எதார்த்தமாகவும், ஒருங்கிணைந்த வளர்ச்சியாகவும் அனுபவிக்க முடியும். மேலும் நம்முடைய பரபரப்பான இன்றைய உலகில், இந்தச் செயல்முறை நிகழ்வதற்குத் தேவையான பொறுமையை இளம் உள்ளங்களில் நாம் மீட்டெடுக்க வேண்டும்.

கல்விக்கூடங்கள், பொது இடங்கள், சமூகங்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் தொடங்கி, அவைகள் நமக்குச் சொல்ல வேண்டியதைக் கேட்பதன் வழியாக, உண்மையான அமைதி அடித்தளத்திலிருந்து வடிவம் பெறுகிறது என்பதை வரலாறும் நடைமுறை அனுபவமும் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளன.

இந்த வழியில், கருத்து வேறுபாடுகள் மற்றும் அவை ஏற்படுத்தும் முரண்பாடுகள் ஒதுக்கி வைக்கப்படாமல், ஒப்புக்கொள்ளப்பட்டு, புரிந்து கொள்ளப்பட்டு, சமாளிக்கப்படும்போது அமைதி சாத்தியமாகும் என்பதை நாம் உணருகிறோம். பொது நலன், சமூக அக்கறையை மையப்படுத்தும் கல்விமுறை காலத்தின் கட்டாயம். அவற்றை FSJ கல்வி நிறுவனங்களால் நிச்சயமாக செயல்படுத்த முடியும். அன்பான, சமாதானமுள்ள அமைதி அனைவருக்கும் சொந்தமானது உரித்தானது.

### சான்று வாழ்க்கை வாழ வேண்டும்:

உலகிலும் நமது சமூகங்களிலும் வன்முறை நிலவுகிறது. போர்கள், பயங்கரவாதம், மனித வர்த்தகம் மற்றும் பரவலான ஆக்கிரமிப்புகளுக்கு மத்தியில், நமது குழந்தைகளும் இளைஞர்களும் வாழ்க்கை கலாச்சாரம், உரையாடல் மற்றும் ஒருவருக்கொருவர் மீதான மரியாதையை அனுபவிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, வித்தியாசமான மற்றும் வன்முறையற்ற வாழ்க்கை முறையைக் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் சான்று வாழ்வு அவர்களுக்குத் தேவை. இவற்றை மனதில் கொண்டு ஆசிரியர்கள் சான்று வாழ்க்கை வாழ வேண்டும்.

### நற்செய்தியும் மறைப்படிப்பினைகளும்:

அகிம்சை என்பது, ஒரு வழிமுறையாகவும் பாணியாகவும் நமது முடிவுகள், உறவுகள் மற்றும் நமது செயல்களை வேறுபடுத்திக் காட்ட கூடியதாகவும் இருக்க வேண்டும்.இந்த முயற்சியில் கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியும் திருஅவையின் சமூக மறைப்படிப்பினையும் நிலையான ஆதரவின் ஆதாரமாக உள்ளன.

அமைதியின் கலாச்சாரத்தை வளர்ப்பது என்பது நம்பிக்கையாளர்கள் மற்றும் நம்பிக்கையற்றவர்கள் என அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்ட பணி. ஆசிரியர்கள் குழந்தைகள் அனைவருக்கும் நற்செய்தியும் திருஅவையின் சமூக மறைப்படிப்பினையும் இணைத்து ஒரு திசைகாட்டியாக செயல்பட முடியும். ஆசிரியர்கள் ஆலோசனை மற்றும் நடைமுறை வழியாக, குழந்தைகளின் மாண்பு மற்றும் பொது நன்மையால் ஈர்க்கப்பட்டு முன்னெடுக்க வேண்டும். இறுதியாக, ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். ஈடுபாட்டுடனும், மகிழ்ச்சியுடனும், விழிப்புணர்வுடனும் தனது பணியை கண்ணும் கருத்துமாய் ஆற்றிட இச்சிறு நிகழ்வு உதவியாக இருக்கும்.

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான். அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது.

மற்றவை அவனுக்குப் புரியவில்லை. அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது.

அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக்கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான். அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகி விட்டது. ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்கும்முன் கடலில் தூர எறிந்து விட்டான்.

இன்றைய இளைய தலைமுறையினர் மட்டுமல்ல ஏன் துறவறத்தார் கூட பல செயல்பாடுகளை அன்றாட தொடர் பழக்கத்தால் அனிச்சை செயல் போல செய்து கொண்டிருப்பது உண்மையே. மனம் ஒன்றிய செயல்பாடுகளை தவிர்த்து ஏதோ கடமைக்கு செய்வது போல அனைத்தும் செய்து வாழ்வதையோ, மூச்சு விடுவதையோ, உடல் இயக்கத்தையோ அனிச்சை செயலாக மாற்றிக் கொண்டு விட்டோம்.

எதற்கு செபிக்கிறோம்? என்ன உணவு உண்ணுகிறோம்? எங்கு செல்கிறோம்? எப்படி பேசுகிறோம்? எதற்காக அலைபேசியில் நேரம் செலவிடுகிறோம்? என்று எந்த கேள்விக்கும் சரியான பதில் தர முடியாத அனிச்சை செயல் பழக்கத்திற்கு சமூகம் அடிமையாகி கூனிக்குறுகி நிற்பதை தலைநிமிரச் செய்வது தான் இன்றைய ஆசிரியர்களுக்கான சவாலான பணி. பழக்கங்களுக்கு அடிமையாவதை தவிர்த்து, செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை என இளையோர் உணர்ந்து கொள்ள நேர்மறையாய் வழிகாட்ட வேண்டும்.

கடவுள் வாழ்கின்ற ஒவ்வொரு உறவும், நமக்கான ஒரு கொடையாக மாறுகிறது அவருடைய ஒரே மகன், யேசு நம் சகோதரராகும்போது, அவருடைய தந்தை நம் தந்தையாக மாறுகிறார், தந்தையையும் மகனையும், இணைக்கும் தூய ஆவியார் நம் இதயங்களில் வாழ்கின்றார்.

சகோதர சகோதரிகள் என்பது உறவைக் குறிக்கும் பெயர்களாகவும், அடிக்கடி திருவழிபாட்டில் பயன்படுத்தும் ஒரு வாழ்த்துச் சொல்லாகவும் இருக்கின்றது நெருக்கம் மற்றும் அன்பின் அடையாளங்களாகத் திகழ்கின்றது.

சமூக ஒழுங்கிற்கு தீங்கு விளைவிக்கும் அநீதிகளை எதிர்கொள்ள வேண்டும், தீமை வெல்லும் என்று நினைக்கும் சோதனைக்கு அடிபணிய வேண்டாம். போர் மற்றும் வன்முறை நிறைந்த, இக்காலத்தில் உண்மையில் உறுதியாக நிலைத்து நிற்கவேண்டும்.

கடவுளின் அன்பு மிகவும் பெரியது, ,இயேசு தனது தாயை கூட தனக்காக வைத்துக் கொள்ளவில்லை, மாறாக, சிலுவையின் அடியில் அவரை நமக்குத் தாயாகக் கொடுத்தார். “கிறிஸ்துவின் தாயை விட அன்னை மரியா கிறிஸ்துவின் சீடராக, இருப்பது மிகவும் மதிப்புமிக்கது” என்று எழுதிய புனித அகுஸ்தினாரின் வரிகளையும் நினைவுகூர்வோம்.

அன்னை மரியாவினது வாழ்வின் அர்த்தம், கடவுளிடமிருந்து பெற்ற வார்த்தையாம், இறைவனுக்கு அவர் நம்பிக்கையாக இருப்பதில் பாதுகாக்கப்படுகிறது. வார்த்தையாம் இறைவனை தனது வாழ்வில் ஏற்றுக்கொண்டு தன் வயிற்றில் சுமந்து, உயிருள்ள வார்த்தையாக, இவ்வுலகிற்கு அவரைக் கொடுத்தார்.

இந்த உடன்பிறந்த உறவு மீட்டெடுக்கப்பட வேண்டும், அன்புகூரப்பட வேண்டும், அனுபவிக்கப்பட வேண்டும், அறிவிக்கப்பட வேண்டும், சான்றாக்கப்பட வேண்டும். இது உண்மையில் சாத்தியம் என்ற நம்பிக்கையுடன், ஆரோக்கிய அன்னை வழியாக நம் இதயங்களில் ஊற்றப்பட்ட கடவுளின் அன்பிற்கு நன்றி கூறுவொம்.

உங்கள் அனைவருக்கும்
ஆரோக்கிய அன்னையின் பிறந்த நாள் வாழ்த்துகள்!
மற்றும்
ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்!

என்றும் பிரான்சீசிய உறவில்
சகோ. **எம். ஆரோக்கியம்** வ.பி.ச.
சபைத் தலைமைச்சகோதரி

SUPERIOR GENERAL
FRANCISCAN SISTERS
OF ST. JOSEPH

FSJ Generalate, Bishop John Aelen Illam, Magazine Road, St. Thomas Mount, Chennai - 600 016. Tamilnadu.
Phone : 2231 2876, 2234 1510 E-mail : fsjaelen1887@gmail.com

# SUPERIOR GENERAL PROGRAMME

## SEPTEMBER 2025

| | | |
|---|---|---|
| 05.09.2025 | - | St. Joseph's Nur & Pri. School, Vilamuthur - Visit |
| 07.09.2025 | - | Extended Council Preparatory Meeting |
| 08.09.2025 - 10.09.2025 | - | FSJAP – General Commissions Preparatory Meeting |
| 11.09.2025 | - | Eucharist at our Founder's Manimandapam |
| 13.09.2025 | - | General & Provincial Councils Meeting |
| 14.09.2025 | - | General Commission Meeting |
| 15.09.2025 | - | Centenary Celebrations - Closing Ceremony Loyola College |
| 16.09.2025 | - | Land Registration – Walazabad |
| 19.09.2025 - 20.09.2025 | - | St. Mary's Vice Province Communities Budget Meeting |
| 21.09.2025 | - | TET Orientation Meeting – Church Park School |
| 24.09.2025 - 25.09.2025 | - | FSJ Provincialate, Trichy – Land Registration |
| 26.09.2025 - 30.09.2025 | - | FSJ Constitution Review |

**02.08.2025 & 03.08.2025 -** The Annual General Body Meeting of the Tamil Nadu Conference of Religious India (TNCRI) was held in Madurai. Mother General Sr. M. Arockiam participated in the meeting contributed to the discussions and discernments.

**02.08.2025** - The Episcopal installation of Archbishop Antonysamy Savarimuthu as the Metropolitan Archbishop of Madurai was solemnly celebrated in Madurai. Our Mother General Sr. M. Arockiam and many of our sisters also participated in the function, joining the clergy, religious, and faithful from across the archdiocese of Madurai.

**06.08.2025 -** The installation ceremony of St. Mary's Vice Province began with the solemn Holy Eucharist, celebrated by Rev. Fr. Ansel Antony and Rev. Fr. Lawrence, the Vicar Forane and Parish Priest of St. Antony's Shrine, Avadi. Our Mother General, Sr. Arockiam, together with the General Team, three Provincials, Superiors, and sisters from St. Mary's Vice Province and St. Joseph's Province, graced the occasion with their presence. During the doxology, the newly appointed team took their vows to remain sincere and faithful in their responsibilities. Finally, the grace-filled occasion concluded with felicitations and a grand fellowship meal.

**08.08.2025 -** A moment of grace and joy was witnessed at the renovated Aelen Home for the Aged, Madurai, when the newly appointed Archbishop of Madurai, Most Rev. Antonysamy Savarimuthu, blessed the Home in a solemn ceremony. The occasion was further graced by the esteemed presence of our Mother General, Sr. M. Arockiam, along with sisters, well-wishers, and benefactors. The event concluded with felicitations and a grand fellowship meal.

**Budget Meeting**

The Budget Meeting was convened at the Generalate chaired by Mother General Sr.M.Arockiam along with Sr. P.S.Celia, Economer General, the three Provincial Superiors, Sr. Leema, Economer Secretary with the participation of the Heads and incharges from schools, communities and provincialates to ensure a transparent and efficient financial planning process. The primary objective of the meeting was to review the income and expenditure of the past year, assess the present financial position, and prepare a realistic budget for the upcoming year in alignment with the mission and priorities of the congregation.

**09.08.2025 -** Boarding Budget Meeting

**15.08.2025** - Online - St. Francis of Assisi Province Communities - 3 batches

**16.08.2025** - Online - St. Francis of Assisi Provincialate, Etmadpur and Schools

1. Don Bosco Eng. Med. High School - Chebrolu
2. Don Bosco Eng. Med. High School - PT Parru
3. Infant Jesus Eng. Med. High School - Vegiwada
4. Shanthi Nikethan Eng. Med. High School - Damaracherala

**20.08.2025 -** Bishop John Aelen Provincialate

**23.08.2025** - St. Joseph Province Communities

**23.08.2025** - St. Joseph Provincialate

**22.08.2025 -** Retirement Function – Sr. Magdalene Pappathi

The Thanksgiving Eucharist was concelebrated by Rev. Fr. L. Kulandai Raj OCD, brother of Sr. Magdalene Pappathi. The retirement function, held in the evening at Our Lady of Assumption Church Campus, was graced by the presence of our Mother General, Sr. M. Arockiam, Sr. Mercy Fathima, Provincial Superior of St. Joseph's Province, Rev. Fr. Raymond, Superintendent of RC Schools, Rev. Fr. M. L. A. Maria John Bosco, Correspondent of St. Agnes Aided Middle School, George Town, and Mr. R. Ganesan, BEEO, Royapuram. A large gathering of priests and religious also added joy to the occasion. The celebration included cultural programmes and felicitations, and concluded with a grand fellowship meal.

**Sr. Shaila FSJ**
General Secretary

# ST. JOSEPH'S PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Uthamanallur Village,
Acharapakkam - 603 301. Kanchipuram Dist.

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## SEPTEMBER 2025

| | | |
|---|---|---|
| 01.09.2025 | - | Acharapakkam |
| 02.09.2025 - 04.09.2025 | - | IHM School Avadi |
| 05.09.2025 - 07.09.2025 | - | IHM School Munar Trip |
| 08.09.2025 | - | St. Mark's Primary School,<br>New Shed Inauguration |
| 09.09.2025 - 12.09.2025 | - | IHM. School, Avadi |
| 13.09.2025 - 14.09.2025 | - | Meeting at Generalate |
| 15.09.2025 | - | Vellore - Bishop Appointment |
| 16.09.2025 - 19.09.2025 | - | IHM School, Avadi |
| 20.09.2025 | - | Superiors Meeting |
| 21.09.2025 | - | Councillor s Meeting |
| 22.09.2025 - 25.9.25 | - | IHM School Avadi |
| 26.09.2025 - 20.10.2025 | - | Sisters Annual Retreat - Batch - 1 |

That They all May be One. Jn 17:21

BISHOP JOHN AELEN PROVINCE

FSJ Provincialate, 63/1, 2nd Street, Alpha Nagar, Karumandapam, Trichy - 620 001.
Mobile: 94861 59689 / E-mail: tryprofsj@yahoo.com

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## SEPTEMBER 2025

| | | |
|---|---|---|
| 01.09.2025 - 03.09.2025 | - | St. Joseph's Convent Alwarpet, Coonoor |
| 04.09.2025 | - | Adaikala Madha Matric School, Sports Day - Nellai Town |
| 05.09.2025 | - | St. Joseph's Nursery and Primary School - Vilamuthur Road, Perambalur. |
| 06.09.2025 | - | Legal Cell Meeting - Chennai |
| 07.09.2025 | - | Province Council Meeting, Karumandapam, Trichy |
| 09.09.2025 | - | Assisi Illam - Sanyasigundu |
| 10.09.2025 | - | St. Joseph's Convent, Ettamadai |
| 11.09.2025 | - | St. Norbert's Convent, Mathravillai |
| 13.09.2025 | - | Meeting at FSJ Generalate, St.Thomas Mount, Chennai |
| 14.09.2025 | - | All Commissions meeting, FSJ Generalate, St. Thomas Mount - Chennai |
| 16.09.2025 | - | Annai Velankanni Matric Hr. Sec. School |
| | - | Singampunari, New Toilet Blocks Blessings |
| 18.09.2025 | - | Assisi Illam, Manakal |
| 19.09.2025 | - | Assisi Illam, Killukottai |
| 24.09.2025 - 30.09.2025 | - | Annual Retreat Batch-1 K.K.Nagar, Trichy |

# ST. FRANCIS OF ASSISI PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Dharera P.O. Etmadpur, Agra Dt - 283 202. U.P.
Phone: 073516 78464 / Email: provincialatefsj@gmail.com


## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### SEPTEMBER 2025

| | | |
|---|---|---|
| 01.09.2025 | - | Seminar on “Caring for Women’s Health Awareness Resource Person. Rev. Sr. Jaya Mary |
| 04.09.2025 | - | Vaduz Home - Bombay Community Visit |
| 06.09.2025 - 08.09.2025 | - | MSFS Fathers and Provincial Meeting |
| 11.09.2025 | - | Travelling to Chennai |
| 13.09.2025 | - | General and Provincial Commissions Meeting |
| 14.09.2025 | - | General Commissions Meeting |
| 17.09.2025 - 26.09.2025 | - | Provincialate, Etmadpur |
| 28.09.2025 - 02.10.2025 | - | Book work (Nochiyodaipatti) |

# ST. MARY'S VICE PROVINCE

Portiuncula Convent, No.5, D.R.R.Street, Avadi, Chennai – 600 054.
Mobile No: +91 81224 02357 | E Mail: fsjstmarysprovince@gmail.com


## VICE PROVINCIAL SUPERIOR PROGRAMME

### SEPTEMBER 2025

| | | |
|---|---|---|
| 05.09.2025 - 06.09.2025 | - | Community Visit |
| 07.09.2025 - 13.09.2025 | - | First Batch Sisters' Retreat<br>Retreat Centre - Poondy |
| 13.09.2025 | - | General & Provincial Council, Meeting |
| 14.09.2025 | - | General Commission Meeting |
| 19.09.2025 - 20.09.2025 | - | St. Mary's Vice Province Communities<br>Budget Meeting |
| 22.09.2025 - 27.09.2025 | - | Second Batch Sisters' Retreat<br>Retreat Centre - Poondy |

# Seeds of Peace and Hope



Dear Brothers and Sisters!

The theme of this World Day of Prayer for the Care of Creation, chosen by our beloved Pope Francis, is "Seeds of Peace and Hope". On the tenth anniversary of the establishment of this Day of Prayer, which coincided with the publication of the Encyclical Laudato Si', we find ourselves celebrating the present Jubilee as "Pilgrims of Hope." This year's theme thus appears most timely.

In proclaiming the Kingdom of God, Jesus often used the image of the seed. As the time of his Passion drew near, he applied that image to himself, comparing himself to the grain of wheat that must die in order to bear fruit (cf. Jn 12:24). Seeds are buried in the earth, and there, to our wonder, life springs up, even in the most unexpected places, pointing to the promise of new beginnings. We can think, for example, of flowers springing up on our roadsides from seeds that landed up there almost by chance. As those flowers grow, they brighten the gray tarmac and even manage to break through its hard surface.

In Christ, we too are seeds, and indeed, "seeds of peace and hope." The prophet Isaiah tells us that the Spirit of God can make an arid and parched desert into a garden, a place of rest and serenity. In his words, "a spirit from on high will be poured out on us, and the wilderness will become a fruitful field, and the fruitful field a forest. Then justice will dwell in the wilderness, and righteousness abide in the fruitful field. The work of righteousness will be peace, and the work of righteousness, quietness and trust forever. My people will abide in a peaceful habitation, in secure dwellings, and in quiet resting places" (Is 32:15-18).

These words of the prophet will accompany the “Season of Creation,” an ecumenical initiative to be celebrated from 1 September to 4 October 2025. They remind us that, together with prayer, determination and concrete actions are necessary if this “caress of God” is to become visible to our world (cf. Laudato Si’, 84). The prophet contrasts justice and law with the desolation of the desert. His message is extraordinarily timely, given the evidence in various parts of the world that our earth is being ravaged. On all sides, injustice, violations of international law and the rights of peoples, grave inequalities and the greed that fuels them are spawning deforestation, pollution and the loss of biodiversity. Extreme natural phenomena caused by climate changes provoked by human activity are growing in intensity and frequency (cf. Laudato Deum, 5), to say nothing of the medium and long-term effects of the human and ecological devastation being wrought by armed conflicts.

As yet, we seem incapable of recognizing that the destruction of nature does not affect everyone in the same way. When justice and peace are trampled underfoot, those who are most hurt are the poor, the marginalized and the excluded. The suffering of indigenous communities is emblematic in this regard.

That is not all. Nature itself is reduced at times to a bargaining chip, a commodity to be bartered for economic or political gain. As a result, God’s creation turns into a battleground for the control of vital resources. We see this in agricultural areas and forests peppered with landmines, “scorched earth” policies, [1] conflicts over water sources, and the unequal distribution of raw materials, which penalizes the poorer nations and undermines social stability itself.

These various wounds are the effect of sin. This is surely not what God had in mind when he entrusted the earth to the men and women whom he created in his image (cf. Gen 1:24-29). The Bible provides no justification for us to exercise “tyranny over creation” (Laudato Si’, 200). On the contrary, “the biblical texts are to be read in their context, with an appropriate hermeneutic, recognizing that they tell us to ‘till and keep’ the garden of the world [cf. Gen 2:15]. ‘Tilling’ refers to cultivating, ploughing or working, while ‘keeping’ means caring, protecting, overseeing and preserving. This implies a relationship of mutual responsibility between human beings and nature” (ibid., 67).

Environmental justice – implicitly proclaimed by the prophets – can no longer be regarded as an abstract concept or a distant goal. It is an urgent need that involves much more than simply protecting the environment. For it is a matter of justice – social, economic and human. For believers it is also a duty born of faith, since the universe reflects the face of Jesus Christ, in whom all things were created and redeemed. In a

world where the most vulnerable of our brothers and sisters are the first to suffer the devastating effects of climate change, deforestation and pollution, care for creation becomes an expression of our faith and humanity.

Now is the time to follow words with deeds. “Living our vocation to be protectors of God’s handiwork is essential to a life of virtue; it is not an optional or a secondary aspect of our Christian experience” (Laudato Si’, 217). By working with love and perseverance, we can sow many seeds of justice and thus contribute to the growth of peace and the renewal of hope. It may well take years for this plant to bear its first fruits, years that, for their part, involve an entire ecosystem made up of continuity, fidelity, cooperation and love, especially if that love mirrors the Lord’s own self-sacrificing Love.

Among the Church’s initiatives that are like seeds sown in this field, I would mention the Borgo Laudato Si’ project that Pope Francis bequeathed to us at Castel Gandolfo. It is a seed that promises to bear fruits of justice and peace, and an educational project in integral ecology that can serve as an example of how people can live, work and build community by applying the principles of the Encyclical Laudato Si’.

I pray that Almighty God will send us in abundance his “Spirit from on high” (Is 32:15), so that these seeds, and others like them, may bring forth an abundant harvest of peace and hope.

The Encyclical Laudato Si’ has now guided the Catholic Church and many people of good will for ten years. May it continue to inspire us and may integral ecology be increasingly accepted as the right path to follow. In this way, seeds of hope will multiply, to be “tilled and kept” by the grace of our great and unfailing Hope, who is the risen Christ. In his name, I offer all of you my blessing.

*- + Pope Leo.*

*September 2025*

*Pope Leo*

Monthly Intention

**FOR OUR RELATIONSHIP WITH ALL OF CREATION**



*Let us pray that, inspired by Saint Francis,*
*we might experience our interdependence*
*with all creatures who are loved by*
*God and worthy of love and respect.*

# VOCATION COMMISSION

### 1. இறையழைத்தல் சந்திப்பு:

13.7.2025 மற்றும் 09.08.2025 – 10.08.2025 ஆகிய தேதிகளில் பில்லாவடந்தை, திரு இருதய குழுமத்தின் கீழ் இயங்கும் நமது காப்பக மாணவிகள், வந்தவாசி மற்றும் தெரசாபுரம் பங்குத்தளம் ஆகிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே பணி செய்துவரும் நமது சகோதரிகளுடன் இணைந்து இளையோருடன் உரையாடி, உறவாடி இறையழைத்தல் பற்றிய விழிப்புணர்வு தந்து, ஈடுபாடும் ஆர்வமும் உள்ள மாணவிகள் பற்றிய தகவல்கள் பெற்றுக்கொண்டு தொடர் தொடர்பிற்கு ஊக்கமூட்டி இறைவேண்டலுடன் நிறைவு செய்யபட்டது.



### 2. VOCATION PROMOTERS CONFERENCE



Sr. Agnes Santiago and Sr. Victoria -vocation promoters of our FSJ congregation have attended in CCBI-VSCR Commission-vocation promoters Conference-2025, August 19-21 in Bangalore. Our sisters have been participated enthusiastically and they felt that it will be most useful for our vocation commission at this difficult situations which we feel everyone of us.

Sr. **Christhu Rani**, FSJ
Vocation Commission Co-ordinator

# FORMATION COMMISSION

**Catechism of the Catholic Church:** It helps the Novices to grow in I Knowledge of church teachings. It explains the essential teachings of the catholic faith. Taken By Fr. Bosco Rayan.

**St. Clar of Assisi:** We become what we love, who we love shapes what we become. We celebrated the Feast Day of St Clar as Superior'S Day, Meaning liturgy was celebrated by Fr Joe Nirmal.

We had a twin celebration on 15th August. Celebration based on the theme of Are we making use of our freedom properly? Do we try to be faithful and humble like Mother Mary?

**PSSG:** (Poovai Social Service Group) Organized their Annual day. Welcome dance given by our Novices.

**Sainthood Process of our Funder Bishop John Aelen:** The process is not to honor the Founder but to Glorify God who works through Him. Our Founder who lived a life of Heroic virtue, hope and imitation of Christ.



**Parents Meet:** Behind every Strong person is a story of parents who gave them strength. Novices energized by their Parents Meet.

**Eucharist:** The Eucharist is the sacrament of love. It Signifies Love, it produces Love. The Eucharist is the consummation of the whole Spiritual life. This Subject was taken by Fr. Besklin Sebastian.

Don Quavanella Special schools - Poonamallee. Novices had 3 days experience in the Special school, Ensure the children with special needs receive the same right to education as all other children. To meet each child's unique abilities, pace, and learning style.

Sr. **Christhu Rani, FSJ**
Formation Commission Co-ordinator

# EVANGELIZATION COMMISSION

**1. அருள்அடையாள தயாரிப்பு பயிற்சி:**

திண்டிவனத்தில் 23.08.205 – 24.08.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அருட்சகோதரிகளுக்கான அருள் அடையாள தயாரிப்பு மறைக்கல்வி பயிலரங்கில் சென்னை மாநிலத்தைச் சார்ந்த மூன்று அருட்சகோதரிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். பயிலரங்கில் கலந்து கொண்ட அருட்சகோதரிகள் Sr. Anthony Selvi, Sr. Virginia, Sr. Fathima ஆகியோருக்கு வாழ்த்துக்கள்.



## 2. தமிழக துறவியர் பேரவை கூட்டம்:

2025–2026ஆம் ஆண்டுக்கான மறைமாவட்ட துறவியர் பேரவையானது மதுரை பில்லர் மையத்தில் நடைபெற்றது இதில் பாளையங்கோட்டை மறை மாவட்டத்தின் துறவியர் பேரவை பொருளாளராக அருள் சகோதரி. செபஸ்டின் ஜெயசீலி அவர்களும் செங்கல்பட்டு மறைமாவட்ட துறவியர் பேரவை செயலராக அருட்சகோதரி. பிரிசில்லா அவர்களும் பங்கேற்றனர். இந்த கூட்டத்தினை தமிழக துறவியர் பேரவைத் தலைவர் வழிநடத்தினார். மறைமாவட்டத்தின் கடந்த ஆண்டு நிகழ்வுகள் அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்பட்டன. இந்த ஆண்டுக்கான திட்டமிடுதலும் நடைபெற்றது.



Sr. **Christhu Rani**, **FSJ**
Evangelization Commission Co-ordinator

# EDUCATION COMMISSION

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம்:



நமது புனித மாற்கு தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை மாநகராட்சி ஆதம்பாக்கம், அடையார் தொகுதி Chairman மற்றும் கவுன்சிலர் உடன் அனைவரும் வருகை தந்து மிகவும் சிறப்பாக மகிழ்ச்சியோடு மாணவ மாணவிகளுக்கு உணவளித்து பள்ளியையும் பள்ளி நிர்வாகத்தையும், இத்திட்டத்தால் எவ்வாரேனும் நமது பள்ளி குழந்தைகளும் பயன் அடைய வேண்டும் என்று முயற்சித்த தலைமையாசிரியர் Rev.Sr.Velanganni, fsj, ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோரையும் பாராட்டி சென்றனர்.





மேலும் ஆவடி புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சிறுபான்மை நலத்துறைத் தலைவர் மரியாதைக்குரிய நாசர் ஐயா அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மதிப்பிற்குரிய பிரதாப் ஐயா அவர்கள், மற்றும் ஆவடி மாநகர ஆணையர் திருமதி. சரண்யா IAS, அவர்கள், மற்றும் ஆவடி மேயர் மதிப்பிற்குரிய உதயகுமார் அவர்கள், துணை மேயர் சூரிய குமார் ஆகிய அனைவரும் வருகைத் தந்து மகிழ்ச்சியோடு மாணவ மாணவிகளுக்கு உணவளித்து பள்ளியையும் பள்ளி நிர்வாகத்தையும் பாராட்டி, இந்த திட்டத்தால் பள்ளி குழந்தைகள் பயனடைய வேண்டும் என்று முயற்சித்த தலைமையாசிரியை Rev. Sr. D.குழந்தை தெரஸ், fsj ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோரையும் பாராட்டி சென்றனர்.

**Dr. Sr. Susai Mary, , FSJ**
Education Commission Co-ordinator

# HEALTH COMMISSION

### 1. மருந்தக ஆய்வகம் (Lab), X-ray Machine மற்றும் Mammogram Machine (Radiology Department) அர்ச்சிப்பு விழா:

07.08.2025 அன்று குமணன்சாவடியில் உள்ள தந்தை வலோஜியா மருந்தகத்தில் (Social Action Dispensary) மருந்தக ஆய்வகம் (Lab), X-ray மற்றும் Mammogram Machine (Radiology Department) புதிதாக துவங்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது.

இந்நிகழ்வானது திருப்பலியோடு ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் Sacred Heart Seminary அருட்தந்தையர்களால் Radiology Department மற்றும் Laboratory ஆனது புனிதப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வினில் Sr. Christurani, Assistant Superior General, Sr. Mary Jenova, General Councillor, Sr. Mercy Fathima, Provincial, St. Joseph Province, Sr. Clara, Superior, Sr. Amali Roja, Dispensary In-charge, அருட்சகோதரிகள், பயிற்சி நிலை சகோதரிகள் மற்றும் அப்பகுதியை சார்ந்த மக்களும் கலந்துக் கொண்டனர்.

இதற்கான பொருள் உதவியை வழங்கிய CEI Project Co-ordinators அனைவருக்கும் எங்களின் இதயம் நிறைந்த நன்றிகளும், செபங்களும்.

எப்போதும் மருத்துவத்துறை வளர்ச்சியில் உறுதுணையாக இருக்கும் சபை தலைமை அன்னை M.ஆரோக்கியம் மற்றும் நிர்வாக குழுவினருக்கும் எங்களின் நன்றிகள். அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்த Sr. Dr. Mary Jenova மற்றும் அவர்களின் நலவாழ்வு பணிகுழுவினர் அனைவருக்கும் நன்றிகள்.





*Where did Francis's journey to Christ begin?*
*It began with the gaze of the Crucified Jesus.*

*- Pope Francis*

## 2. இலவச மருத்துவ முகாம்:

07.08.2025 அன்று புனித மரிய வியான்னி திருவிழாவை முன்னிட்டு குமணன்சாவடியில் உள்ள தந்தை வலோஜியா மருந்தகத்தில் (Social Action Dispensary) இலவச மருத்துவ முகாமானது நடைபெற்றது. இம்முகாமில் St. Thomas மருத்துவமனையை சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் கலந்துக் கொண்டார்கள். குறிப்பாக Dr. Kannan, Orthopedic Surgeon, Dr. Karthick Srinivasan, General Physician & Dr. Dinesh Kumar, General Surgeon. இவர்களின் மருத்துவ ஆலோசனை மிகச் சிறப்பாக அமைந்தது.

இம்முகாமில் ஏராளமான அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மற்றும் இப்பகுதியை சுற்றி வாழும் மக்களும் பங்கேற்றனர்.

அனைவரும் மருத்துவர்களின் ஆலோசனைப் பெற்று தேவைகளுக்கு ஏற்றார்போல் இரத்த பரிசோதனை, X-ray, Mammogram, எலும்பு சத்தின் தன்மை (BMD) ஆகிய பரிசோதனைகளை இலவசமாக பெற்றுக் கொண்டனர். மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த Sr. Dr. Mary Jenova அவர்களுக்கும் உடன் இருந்து உதவிய Sr. Sebastine, Sr. Inba Rita, Sr. Mariyammal, அனைவருக்கும் நன்றிகள். இம் முகாம் சிறப்புற அமைய முயற்சிகள் செய்து உதவிய Sr. Clara, Sr. Amali Roja, Sr. Sammanasu, Sr. Alphonse அனைவருக்கும் நன்றிகள். அனைவருக்கும் அன்பின் விருந்தை வழங்கி உபசரித்த Sr. Christu Rani, Sr. Josephine அவர்களுக்கும் எங்களின் இதயம் நிறைந்த நன்றிகள்.



## 3. 1500 புனிதர்களின் அருளிக்கங்களின் அருட்காட்சி: இலவச முதலுதவி

15.08.2025 முதல் 17.08.2025 ஆகிய மூன்று நாட்களில் அமல அன்னை ஆலயம், குரோம்பேட்டை பங்கினில் நடைபெற்ற 1500 புனிதர்களின் அருளிக்கங்களின் அருட்காட்சி நிகழ்வில் St. Thomas மருத்துவமனை இலவச முதலுதவி குழவினை ஏற்பாடு செய்து, அந்த மூன்று நாட்களுக்கும் நம்பிக்கையாளர்களுக்கு உதவியது மிக சிறப்பு மிக்கது. உடல், மன நோய்களிலிருந்து விடுபட திரண்டுவந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நம் மருத்துவமனை உதவியது பெரும் ஆசீர்வாதமாக அமைந்தது. இதற்கு உதவிய அருட்சகோதரிகள், செவிலியர்கள் அனைவருக்கும் நன்றிகள்.



## 4. TNBC HEALTH CARE COMMISSION MEETING:

12.08.2025 முதல் 13.08.2025 ஆகிய இரண்டு நாட்களிலும் Infant Jesus Church, Trichyயில் Stronger Tomorrow: Adiction – Free Children And Youth Today என்ற தலைப்பில் நலவாழ்வு பணிச் செய்யும் சகோதரிகளுக்கு கருத்தமர்வானது நடைப்பெற்றது. இதில் நம் சபையின் சார்பாக Sr. Maria Filamenal அவர்கள் கலந்துக் கொண்டு பயன் பெற்றார்கள். இதன்மூலம் பணித் தளங்களில் பல்வேறு கெட்ட பழக்க வழக்கங்களில் உழலும் சிறுவர்கள் மற்றும் இளையோரை எவ்வாறு வெளியே கொண்டு வருவது அவர்களுக்கு ஒரு நல் வழிகாட்டியாக எப்படி இருப்பது என்கிற நுணுக்கங்கள் கற்றுத் தரப்பட்டது. Sr. Maria Filamenal அவர்களின் பங்களிப்புக்கு நன்றிகள்.



---

## 5. AWARENESS PROGRAMME FOR DIGITAL HEALTH ACCREDITATION:

27.8.2025 அன்று தரமணியில் உள்ள Apollo Proton Cancer Center, மருத்துவமனையில் Digital Health Accreditation பற்றிய ஒருநாள் அமர்வானது நடைபெற்றது. இதில் நம் சபையை சார்ந்த Sr. Inba Rita மற்றும் St. Thomas Hospital Staff பங்கேற்றனர். இதன் மூலம் எவ்வாறு மருத்துவமனையின் தரத்தை உயர்த்தலாம் என்ற கருத்தும் இன்னும் ஒரு 20 ஆண்டுகளில் மருத்துவப்பணி எவ்வாறு அமைய வேண்டும் என்ற கனவும் பகிரப்பட்டு பல விழிப்புணர்வை ஏற்படுத்தியது இந்நிகழ்வில் நம் மருத்துவமனை சார்பாய் கலந்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.



**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

# COMMUNICATION COMMISSION

திருச்சி ஆயர் ஜான் ஆலன் மாநிலம் தகவல் தொடர்பு பணிக்குழு சார்பாக திருவாலந்துறை குழந்தைகள் காப்பகத்தில் ஏற்படுத்தப்பட்ட கலை குழு சார்பில் மட்கும் குப்பை மட்காத குப்பை விழிப்புணர்வு நிகழ்வு பள்ளி மாணவ மாணவியர்க்கு அருட்சகோதரி ஜெம்மா அவர்களால் வழங்கப்பட்டது .



**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

---

## *PRAYER SERVICE - 21.08.2025*
## *Marking the beginning of the sainthood process of our Founder Archbishop John Aelen.*



---

# *Congratulations!*



காளான் கீற்றுகள் எனும்
குறுங்கவிதை நூலை எழுதி வெளியிட்ட
அருட்சகோதரி. **லூர்து அமல ஜெயந்தி,** FSJ
அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த
வாழ்த்துக்கள்.



# சமூக பணிக்குழு

## 1. ஆரி வொர்க் பயிற்சி:



ஆயர் ஜான் ஆலன் மாநிலம் திருச்சி சமூக பயன்பாட்டு பணிக்குழு சார்பாக நகலூர் பணித்தளத்தில் இரண்டாம் கட்ட ஆரி வொர்க் பயிற்சி சகோதரி கிரேஸி அவர்களால் வழங்கப்பட்டது.

## 2. புடவை அலங்கார மடிப்பு பயிற்சி:



27.7.2025 அன்று தூய தோமையார் மலையிலுள்ள அசிசி இல்லம் நேதாஜி நகரில் 24 பெண்களுக்கு புடவைகளை காலத்தின் சூழலுக்குக்கேற்ப எவ்வாறு அலங்கரித்து கொள்வது என்பதைப்பற்றிய புதிய வகையான பயிற்சியானது கொடுக்கப்பட்டன. இதுப்போன்ற பயிற்சியை பெற்றப்பின் பெண்கள் ஏதாவது சிறப்பு நிகழ்வுகளுக்குச் செல்லும் போது உடனடியாக மிகவும் சிறப்பு வாய்ந்த அலங்காரத்துடன் புடவைகளை அணிந்து செல்லலாம் அதுமட்டுமின்றி இதுப்போன்ற பயிற்சிகள் பெற்றவர்கள் பிறருக்கும் புடவை அலங்காரம் செய்து மடித்துக் கொடுக்கலாம் இதனால் ஒரு புடவைக்கு ரூபாய் 300 முதல் 500 வரை சம்பாதிக்கலாம். இந்த பயிற்சி மூலம் 24 பெண்கள் பயன்னடைந்தார்கள். இதற்கான ஏற்பாடுகளை Sr. Arul Mary மற்றும் சகோதரிகள் இணைந்து செய்தார்கள்.

## 3. சிறைப்பணி:

10.8.2025 அன்று கூடுவாஞ்சேரியிலுள்ள நல்லாயன் ஆலயத்தில் சிறைப்பணிக்கான திருப்பலியானது ஆயர் நீதிநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து செங்கை மறைமாவட்டத்தின் சிறைப்பணிக்குழுவுடன் இணைந்து ஆயர் அவர்களின் தலைமையில் கூடுகையானது நடைபெற்றன. இக்கூடுகையில் மாநில அளவில் நடைபெறவிருக்கும் ஆற்றுப்படுத்துதல் பயிற்சி பற்றி பேசப்பட்டது. மேலும் அதற்கான ஏற்பாடுகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் பேசப்பட்டன. இக்கூடுகையில் 12 நபர்கள் கலந்துக் கொண்டார்கள்.

15.8.2025 அன்று ஆயர் நீதிநாதன் அவர்களின் தலைமையில் செங்கல்பட்டு மாவட்ட சிறையை சந்தித்தனர். சுதந்திர தினவிழாவை முன்னிட்டு சிறைவாசிகளை சந்திக்க வரும் இல்லவாசிகள் காத்திருப்பு பகுதியில் அமர்வதற்க்கு தேவையான இருக்கைகள் தேவைப்படுவதால் கண்காணிப்பாளர் திருமதி. புகழரசி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கேற்ப 10 இருக்கைகளானது நமது FSJ சபையின் சார்பாக ஆயர் அவர்களின் கரங்களின் மூலம் சிறைக்கு கொடுக்கப்பட்டன. இதனால் சிறையில் வாழும் சிறைவாசிகளை சந்திக்க வரும் குடும்பத்தினர் பல மணிநேரம் வெயில், மழையில் நின்றுக் கொண்டு காத்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது சிறைவாசிகளை சந்தித்து செல்ல இந்த இருக்கைகள் உதவியாக இருக்கின்றன.





16.8.2025 அன்று மாநில அளவிலான கூடுகையானது "மனம் தேற்றும் மனிதர்களாய்" என்ற தலைப்பில் நடைபெற்றது. கருத்தாளர்கள் அருட்பணி. முனைவர். சத்தியன் CAP, OFM மற்றும் அருட்பணி. சுரேஷ் CAP, OFM ஆகியோர் ஆவர். இக்கருத்தமர்வு தொடக்க நிகழ்வில் மேதகு ஆயர் நீதிநாதன் அவர்கள் மற்றும் அருட்பணி. டோணி பேராசிரியர், செங்கல்பட்டு மறைமாவட்ட சிறையின் கண்காணிப்பாளர் புகழரசி மற்றும் காஞ்சிபுரம் கிளை சிறை துணை கண்கானிப்பாளர் திரு. சுப்பிரமணி மேலும் கருத்தாளர்கள் மற்றும் 18 மறைமாவட்டங்களிலிருந்து அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களின் சார்பாக தன்னார்வலர்கள் கலந்துக் கொண்டார்கள். இக்கூடுகையில் ஆற்றப்படுத்துதல், உணர்வுகள், சிகிச்சைகள், உளநல கோளாறுகளின் வகைகள் பற்றி கூறப்பட்டன. மேலும் இந்த அமர்வின் வழியாக எவ்வாறு சிறைவாசிகளை கையாளுவது என்பது பற்றியும் பேசப்பட்டது. இந்த கூடுகையில் நமது சபையின் சார்பாக மூன்று சகோதரிகள் கலந்துக் கொண்டு பயன் அடைந்தார்கள். இந்த அமர்வில் 137 நபர்கள் கலந்துக் கொண்டார்கள்.

---

### 4. சுயதொழில் பயிற்சி:



24.8.2025 அன்று FSJ சபையின் கீழ் இயங்கி வரும் பெண்கள் சுயஉதவி குழுவிற்க்கு Soapoil மற்றும் Surf தயாரிக்கும் பயிற்சியானது திருமதி கலையரசி அவர்களின் வழியாக கொடுக்கப்பட்டன. இதில் 15 பெண்கள் சுயதொழில் செய்ய முன்வந்து கற்றுக் கொண்டார்கள். இந்த பயிற்சியானது நேதாஜி நகர் சமூகப்பணி மையத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. அனைவரும் ஆர்வமுடன் கலந்துக் கொண்டு பயனடைந்தார்கள். இதற்கான ஏற்பாடுகளை சமூகப்பணிக்குழு செய்தார்கள்.

---

### 5. அரசாங்க நலத்திட்டம்:

திருமுக்காடு உத்தமநல்லூர் கிராமத்தில் உள்ள மகளிர்க்கு அரசாங்க நலத்திட்ட உதவிகளிலிருந்து தையல் இயந்திரங்கள் 46 பெண்களுக்கு மனு கொடுக்கப்பட்டு எட்டு பெண்களுக்கு இன்றைய தினத்தில் சுதந்திர தின விழாவை ஒட்டி மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் வழங்கப்பட்டது அதை Acharapakkam இல்லத்தில் மாநிலத் தலைவி சகோதரி மெர்சி பாத்திமா அவர்களின் முன்னிலையில் பெண்களுக்கு வழங்கி வாழ்வாதாரத்திற்கான உதவியை செய்துள்ளது.

**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*








09.08.2025 மற்றும் 10.08.2025 இந்த இரண்டு நாட்களும் காப்பக பொறுப்பாளர்கள் மற்றும் இல்ல தலைவிகளுக்கு தலைமையகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

முதல் நாளில் ஒவ்வொரு காப்பகத்திற்கான நிதி வரைவு திட்டமிடப்பட்டது. இரண்டாம் நாளில் சிறப்பு விருந்தினர் திரு. ஜேசு ராஜா அவர்கள் குழந்தைகள் பாதுகாப்பிற்கான சட்டங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள், புதிய விழிப்புணர்வு திட்டங்கள் அதிலும், சிறப்பாக பணி செய்யக்கூடிய தன்மைகள், அரசு அதிகாரிகளிடம் நம் அணுகுமுறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும் மிகத் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் சபையின் பொது ஆலோசக அருட்சகோதரி P. அருள் மேரி, பொருளாளர் அருட்சகோதரி சீலியா, புனித வளனார் மாநில தலைமை அருட்சகோதரி மெர்சி பாத்திமா, புனித பிரான்சிஸ் அசிசி மாநில தலைமை அருட்சகோதரி ரீட்டா மேரி மற்றும் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

## மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை:

தமிழக அரசு வழங்கியுள்ள விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை புனித அந்தோணியார் சிறார் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இது ரூபாய் 5 லட்சம் வரையிலான உயர் மருத்துவ சிகிச்சைகளை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக பெற வகை செய்கிறது. ஜில்லா அதிகாரியிடம் இருந்து கடந்த 23ஆம் தேதி இல்லத்தில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் பெறப்பட்டது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.



**Sr. Arul Mary**
*Women and Female Commission, Co-ordinator*

# FINANCE COMMISSION

## BUDGET MEETING:

The Budget Meeting was convened at the Generalate chaired by Mother General Sr.M. Arockiam along with Sr. P.S.Celia, Economer General, the three Provincial Superiors, Provincial Enconomer & Sr. Leema Rose, Economer Secretary with the participation of the Heads and incharges from schools, communities, and provincialates to ensure a transparent and efficient financial planning process. The primary objective of the meeting was to review the income and expenditure of the past year, assess the present financial position, and prepare a realistic budget for the upcoming year in alignment with the mission and priorities of the congregation.

09.08.2025 - Boarding Budget Meeting

15.08.2025- Online - St. Francis of Assisi Province Communities – O 3 batches

16.08.2025 – Online - St.Francis of Assisi Provincialate, Etmadpur and Schools

1. Don Bosco Eng. Med. High School - Chebrolu
2. Don Bosco Eng. Med. High School - PT Parru
3. Infant Jesus Eng. Med. High School - Vegiwada
4. Shanthi Nikethan Eng. Med. High School - Damaracherala

20.08.2025 - Bishop John Aelen Provincialate

23.08.2025 - St. Joseph Province Communities

23.08.2025 - St. Joseph Provincialate

The meeting also provided a platform to share best practices, strengthen financial discipline, and foster a spirit of collaboration among schools, communities, and provincialates. The participants resolved to work with commitment and transparency, ensuring that financial stewardship reflects the values and vision of the congregation.



**Sr. Celia**
*Finance Commission, Co-ordinator*

# COMMISSION MEETING

**திருச்சி ஆயர் ஜான் ஆலன் மாநிலம்:**

09.08.2025 அன்று காலை அனைத்து பணி குழுக்களுக்கும் வலுவூட்டும் கருத்தமர்வு நடைபெற்றது இதற்கு திருமதி. அந்துராணி பிரோங்கோ மற்றும் திருவாளர் சீசர் ஃபிரோங்கோ ஆகியோர் நெறியாளர்களாக பங்கேற்று கருத்தமர்வை வழிநடத்தினார் இதில் அனைத்து பணி குழுக்களை சார்ந்த சகோதரிகள் 28 பேர் வந்து கொண்டனர் இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில தலைமை சகோதரி வேளாங்கண்ணி ஷெரின் மற்றும் பொருளர் சகோதரி ஜெயராணி ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மேலும் அன்றைய தினம் மாலை 5 மணி அளவில் புனித கிளாரா நினைவு நாளை முன்னிட்டு அனைத்து இல்ல தலைமை தின விழாவாக கொண்டாடப்பட்டது. இதில் திருச்சி மாநிலத்தை சேர்ந்த அனைத்து இல்ல தலைமை சகோதரிகளும் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர். இவ்விழாவிற்கு ஒரு மணி நேரம் கருத்தாளராக அருட்தந்தை ஜோசப் மரியான் கலந்து கொண்டார். இறுதியாக திருப்பலியுடன் இல்ல தலைவிகளின் விழா நிறைவு பெற்றது.





---

**ST. JOSEPH'S PROVINCE, ACHARAPAKKAM:**

**Theme:** "Mission and Shared Living"

**Resource Person:** Rev. Fr. J. Vimal from Salem Diocese, Director of Leprosy Relief Rural Centre, Omalur, Salem, who brought valuable insights and expertise.

**Participation:** It's great to hear that all commission members participated with much vigour!

**Outcome :** The day being fruitful is a wonderful outcome.



# அன்னையின் பிறப்பு, இப்பூமித்தாயின் உயிர்ப்பு



இப்புவியில் வாழ்வோரின் பூரண ஜென்மத்தை
புதுப்பிக்க பிறந்திட்ட பொன்னொளிர் விண்மீன்
படைத்திட்ட பரமனை பாவத்தால் தொலைத்திட்ட மனிதத்தை
பாதுகாக்க அன்னாள் சுவக்கீன் என்ற
பெற்றோரின் வழியாக உதித்திட்ட நிலவு
தூய ஆவியாரால் அன்னாளின் கருவறையில்
கண்டெடுக்கப்பட்ட பொக்கிஷம்
பெண்மணியாய் பிறப்பெடுத்ததால் பெண்ணினத்தின்
பெருமையை பாதுகாக்க மண்ணகம் வந்த தங்க தாரகை
பக்தி என்ற அருவியில் முளைத்திட்ட தெளிந்த நீரோடை
அன்னை மரியாள்
தன்னால் ஆகுமோ என்று சந்தேகித்த பெற்றோரின் கருவறையை
கனியாகி இன்பத்தை அள்ளி தந்தவள் அன்னை மரியாள்
இறைத்திட்டத்தை நிறைவு செய்ய உலக மகனை
பெற்றெடுக்க கடவுளால் தேர்வு
செய்யப்பட்ட தெய்வத்திருமகள் அன்னை மரியாள்
குழந்தை பருவம் முதல் கன்னிப்பருவம் வரை கடவுளின்
கரத்தில் கண்மணிபோல் பத்திரமாய்
பாதுகாக்கப் பட்ட கடவுளின் கைவண்ணம் அன்னை மரியாள்
தான் படைத்த உலகத்தை மீட்க உலக இரட்சகர்
உதிக்க வேண்டும் என்ற இறைத்திட்டத்திற்கு
தன்னை அர்ப்பணித்த தியாக தீபம் அன்னை மரியாள்
திருச்சபைக்கு தாயாகி இறைவனால் வனைந்து
உருவாக்கப்பட்ட வண்ணப்பாத்திரம் அன்னை மரியாள்
தரணியை காக்க கடவுள் தன்னைப்போல் உருவாக்கிய
மனிதன் பாவம் செய்து சாபப் படுகுழியில் வீழ்ந்த போது
இயேசு என்ற மீட்பரை பெற்று மனிதத்தை
மீட்டெடுக்க உதவிய மீட்பின் சிகரம் அன்னை மரியாள்

கன்னிமை குன்றாமல் என்றும் அமல உற்பவியாய் சூசை தந்தையின் துணைவியாய் உலகத்தை காத்துக்கொண்டிருக்கும் உத்தம சீலி அன்னை மரியாள், எளிமையின் தன்மை கொண்டு இறைமகனை பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்று உயிர்களின் உச்சமாய் இறைவன் படைத்த உன்னத மனிதனின் பிறப்பை புண்ணியமாக்கிய பூரண கன்னி அன்னை மரியாள். இருளடைந்த உலகத்தை வெளிச்சத்தில் பிரகாசிக்க செய்ய அன்னாளின் கருவூலத்தில் கனிந்த சூரியன் அன்னை மரியாள்.

உனது பிறப்பால் அமைதியின்றி தவித்த உலகம் அமைதி பெற்றது, நம்பிக்கை இன்றி நலம் குன்றிய மாந்தரின் நடுவில் நம்பிக்கை ஒளி உதித்தது. மகிழ்ச்சியை தொலைத்திட்ட மானுடத்திற்கு மகிழ்ச்சி மலர்ந்தது, அன்பை இழந்து ஆறுதல் இன்றி தவித்தோருக்கு அன்பு ஆறுதல் துளிர்த்தது.

இயேசுவை கருத்தாங்க முன் பயணித்த பெட்டகமே
தரணியை மீட்க தன் ஒரே மகனை தியாகம் செய்த தியாக தீபமே நீவிர் கையில் ஏந்திய
இயேசு என்ற ஒளி இவ்வுலகை பிரகாசிக்க வைத்தது. பகைமையால் கருகிப்போன
உள்ளங்கள் புது தளிரை கண்டது. குழம்பிப்போன இதயங்கள் தெளிந்து புத்தொளி
வீசின. அன்னை மரியே உமது பிறப்பு தரணியில் மலர்ந்த அனைவருக்கும் சிறப்பு.

அன்னை மரியின் ஆசீர் உலகெங்கும் பொங்கி
இவ்வவையோர் அனுபவிக்க அருள்புரிவாராக.
அன்னை மரியே வாழ்க ! அமல மரி வாழ்க !
ஆரோக்கிய அன்னை நாமம் வாழ்க!



**Sr. Arockia Selvi**
St. Thomas Convent

---



*Bishop John Aelen Province*
*Superiors Annual Retreat - Bangalore*

# TEACHERS' DAY - A BEACON OF INSPIRATION

**"A Tribute to Our Guiding Lights"**

As we step into the New Year of 2025,Teachers' Day on September 5th shines as a profound celebration of the timeless legacy of educators. Commemorating the birth anniversary of Dr.Sarvepalli Radhakrishnan avisionary scholar, philosopher, and India's second President, this day honors the luminaries who believe that "teachers should be the best minds in the country." In an era of transformative change, where digital media and cutting-edge technology redefine education, the role of teachers remains irreplaceable. They are not merely educators but architects of dreams, weaving curiosity, knowledge and values into the fabric of future generations.

Teachers stand as unwavering beacons amidst the rapid evolution of learning systems. from virtual classrooms to AI-driven tools, technology amplifies access to information, yetitis the teacher's wisdom that transforms data in to meaningful insight. Theirpa- tience nurtures critical thinking, their passion ignites creativity, and their guidance fosters resilience. Beyond the classroom, teach- ers shape character, instilling ethics and empathy that endure a lifetime. We celebrate educator severy where for their self less dedication, lighting the path to a brighter tomorrow in a world of infinite possibilities.

**Why We Celebrate**

- To honor educators whom old the minds and hearts of future leaders with unwavering commitment.
- To recognize the enduring value of teachers in a tech - driven world, where their human touch remains unmatched.
- To inspire gratitude for those who dedicate their lives to the noble pursuit of knowledge and growth.

**"A Teacher's Eternal Flame"**

A teacher's voice, agentle spark,
A Teacher shapes our dreams with patience,
guards our hopes with care,
And every lesson given
Is a gift beyond compare.

To the hands that light our pathways
To the hearts that help us grow
We thank you, dear teachers,
More than words can ever show.

Lights the mind through light and dark.
With wisdom's glow, they lead the way,
Turning dreams to dawn's new day.
In class rooms vastor screens so wide,
They stand as mentors, stead fast guide.
With every lesson, hope they weave,
In hearts that learn, in minds that believe.

To teachers bold, who shape our fate,
Your timeless gift we celebrate.
In this new world, your flame burns bright,
Guiding us all to wisdom's light.

Warmest Wishes to all teachers on this
Special Day.
Happy Teachers' Day !



**Sr. Rajmeena**
Vilamuthur

# இறையுறவில் இரண்டறக் கலந்த பிரான்சிஸ்

**அகத்திலும் புறத்ததிலும் இறைவனின் அனுபவம்:**

**“லாவெர்னாவில் பிரான்சிஸ்”**

ஆண்டவரோடு தனித்திருக்கவும் அவரது தரிசனம் காணவும் அவரோடு இரண்டரக் கலந்திடவும் விரும்பினார் பிரான்சிஸ். அவ்வாறு விரும்பிய அவர் இறையுறவில் இன்புற்றிட தகுந்த ஓர் இடமாக லாவெர்னாமலையைத் தேர்வு செய்தார். அவரின் விருப்பப்படி அவருக்கு நெருக்கமான சகோதரர்களை மலைக்குக் கூட்டிச் சென்றார்.

**பறவைகள் தந்த வரவேற்பு:**

மலைச்சரிவில் மகிழ்வோடு சென்ற போது பறவைகள் அவரை தனது இன்னொலி எழுப்பி வரவேற்றது. அதனை கண்டு பரவசமானார். அப்பறவைகள் பிரான்ஸிசின் தோள் மீதும் கைகள் மீதும் கால் அடியிலும் அமர்ந்துக் கொண்டன. பறவைகளோடு உறவாடி மகிழ்ந்தார்.

**தனிமையில் செபிக்கசென்றார் பிரான்சிஸ்:**

ஆண்டவரோடு தனித்திருக்க தனிமையான ஓர் இடத்தை தேடினார் பிரான்சிஸ். அடர்ந்தக் காட்டுப்பகுதியில் ஓர் பிளவுக்கு அப்பால் சமதளமான ஒரு பாறையில் ஒரு சிறிய அறை ஒன்றை உருவாக்கி செபிக்க இடம் ஏற்பாடு செய்தார். தனித்திருந்தார், விழித்திருந்தார், கடவுளோடு செபித்து வந்தார். அவரை லியோ மட்டும் அவ்வப் போது பார்த்து செல்வார். பசிக்காக உணவும், தண்ணீரும் கொடுத்து செல்வார். குரல் கேட்டால் அனுகி செல்வார். குரல் கேட்கவில்லை என்றால் அக்கறையோடும் அன்போடும் மிகுந்த மரியாதையோடும் சத்தமின்றி நடந்து செல்வார்.

**தேவதூதனால் தேற்றப்பட்டார்:**

இயற்கையின் நடுவே இந்த தனிமையான இடத்தில் பிரான்சிஸ் ஆண்டவரிடம் தன் இருதயத்தை ஊற்றினார். தன் ஆத்துமாவை தேவ அன்போடு ஒருமுகப்படுத்தினார். ஓவ்வொரு நாள் இரவும் லீயோ வரும் போது அவர் தனது அனுபவங்களை லீயோவுடன் பகிர்ந்துக் கொண்டு ஆறுதல் பெற்றார்.

ஒரு நாள் அவர் தனக்கு பரலோக மகிழ்ச்சியைக் காட்டும் படி தேவனை நோக்கி வேண்டினார். அப்போது ஒரு தேவ தூதன் தன்னருகே வந்து தன்னை பலப்படுத்துவதைச் சுற்றிலும் உணர்ந்தார். இனிமையான வயலின் இசையானது தன்னை சுற்றிலும் பரவுவதை அவர் அனுபவித்தார்.

ஒரு பருந்தும் அவருக்கு நெருக்கமான தோழனாக இருந்தது. அவர் அறைக்கு அருகே அதன் கூடும் இருந்தது. பகல் வேளைகளில் அவருக்கு நெருக்கமாக அமர்ந்து ஆறுதலைக் கொடுக்கும். அது இரவில் அவர் கண் அயர்ந்துவிட்டால் லியோ வரும் வேளையில் அவரை சரியாக எழுப்பிவிட்டு விடும். இவ்வாறு லியோவும், தேவதூதனும், இந்த பருந்தும் அவருக்கு தேவனிடமிருந்து ஆறுதலை கொண்டு வந்தார்கள்.

### பரலோக ஒளி பரவியது:

ஓரிரவு லியோ குரல் கொடுத்த போது எந்தவித பதில் குரலும் வரவில்லை பிரான்சிஸ்க்கு உடல் நலமில்லாமல் போய்விட்டதோ என்ற கவலையோடு லியோ பாலத்தைக் கடந்து காட்டுப்பகுதிக்கு விரைந்தார். அங்கே அவர் ஒரு அற்புதமான காட்சியைக் கண்டார். அப்போது

பிரான்சிஸ் முழங்காலில் நின்றபடியே “ஆண்டவரே நானோ ஒருமோசமான புழுவாகவும் பயனற்ற வேலைக்காரனுமாக இருக்கிறேன். உமக்கு முன்னால் நான் யார் தேவனே?” என்று மறுபடியுமாக கூறிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

அப்போது பரலோகத்திலிருந்து பாய்ந்து வந்த ஓர் ஒளி பிரான்சிஸிசை சுற்றிலும் பரவியது. பிரான்சிஸ் மூன்று முறை தன் இருதயத்திலிருந்து எதையோ எடுத்து அந்த ஒளியை நோக்கி நீட்டுவதைக் கண்டார் லியோ. பின்பு அந்த ஒளி மறைந்துவிட்டது. லீயோ மௌனமாக திரும்பினாலும் அவரது காலடியோசை அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது. ஆனால் பிரான்சிஸ் கோபப்படவில்லை. அவரின் அந்த அனுபவத்தை லியோ உடன் பகிர்ந்துக் கொண்டார்.

அந்த ஒளி பாய்ந்தவுடன் மூன்று காணிக்கைகளை கொடுக்கும் படி அவரிடம் கேட்கப்பட்டது. தன்னிடம் ஒன்றுமில்லையே என்ற எண்ணத்தில் அவர் தயங்கினாார். பிறகு அந்த குரலின் கட்டளைப்படி தன் நெஞ்சில் கையை வைத்தார். அப்போது ஒன்றன் பின் ஒன்றாக மூன்று தங்கப் பந்துகள் அவர் கையில் தட்டுப்பட்டன. அவற்றை அவர் காணிக்கையாக செலுத்தினார். பின்பு பரலோக கட்டளைக்கேற்ப அவர் தன் இருதயத்தை ஆராய்ந்து ஏழ்மை, தூய்மை, கீழ்ப்படிதல் இவற்றை காணிக்கையாக செலுத்திருந்தார்.

அந்த வேலையில் தேவன் தன்னை இன்னும் அதிகமாக நெருங்கி வருவார் என்ற வெளிப்பாட்டையும் பெற்றார். கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளில் அவர் பங்கேற்க விருக்கிறார் என்பதையும் தேவன் அவருக்கு சுட்டிக் காடடினார். திருச்சிலுவை திருநாளன்று அவர் அந்த அனுபவத்தை பெற்றார்.

### தரிசனம் கண்டார் பிரான்சிஸ்:

அன்று அதிகாலையில் பொழுது விடிவதற்கு சற்று முன்னர் அவர் தன் சிறிய அறைக்கு முன்னால் முழங்காற்படியிட்டு கீழ்வானில் ஒளிக்கீற்று பரவ துவங்குவதைக் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் அருகே ஒரு பாறை இருந்தது. அதைப் பார்க்கும் போதெல்லாம் கெத்சமணித் தோட்டத்தில் கிறிஸ்துவின் இரத்த வியர்வை சொரிந்த பாறையையே அவர் நினைத்து பார்த்தார். அப்போது அவர் மிகுந்த மனபாரத்தோடு செபிக்க தொடங்கினார். அதாவது இவ்வாறுசெபித்தார்.

“ஆண்டவராகிய இயேசுவே நான் மரிப்பதற்கு முன்னர் உம்மிருந்து இரண்டு கிருபைகளை வரமாக வேண்டுகிறேன். முதலவதாக, சிலுவையில் நீர் அனுபவித்த பாடுகளின் வேதனையை நான் என் உடலிலும் ஆன்மாவிலும் அனுபவிக்கும் பாக்கியத்தை எனக்கு தந்தருள வேண்டும்.

இரண்டாவதாக பாவிகளாகிய எங்களுக்காக சிலுவையின் பாடுகளையும் தாங்கிக்கொள்ளும் அளவிற்கு நீர் எங்கள் மீது வைத்துள்ள மிகுதியான அன்பை நான் என் இதயத்தில் உணரும் பாக்கியத்தையும் அருளவேண்டும்” என்று பிரான்சிஸ் கெஞ்சி மன்றாடினார்.

கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளையும் அவரது எல்லையற்ற அன்பையும் அவர் தொடர்ந்து தியானித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் நிமிர்ந்து பார்த்த போது வானமெங்கும் இறக்கைகளைக் கொண்டு பரப்பி கொண்டிருந்த ஓர் உருவத்தைக் கண்டார். இரண்டு இறக்கைகள் தலைக்கு மேலே பரவியிருந்தது. இரண்டு இறக்கை பறப்பதற்கு உதவியாக இருந்தது. இரண்டு இறக்கை உடலை மூடியிருந்தது. அந்த சேராபீன் வானத்திலிருந்து வேகமாகப் பாய்ந்து வருவதைக் கண்டார். அதனைப் பார்த்த பிரான்சிஸ் ஒரு கணம் பயந்து விட்டார்.

ஆனால் சிலுவையில் அறையப்பட்ட ஒருவராக அவர் வருவதைக் கண்டவுடன் அவரது பயம் மகிழ்ச்சியாக மாறியது. ஆணிகளால் துளைக்கப்பட்ட கால்கள் அந்தப் பாறையின் மீது இறங்கின. நிமிர்ந்து பார்த்த அவர் சிலுவையின் வேதனையின் மத்தியிலும் மாறாத அன்போடு அவரை நோக்கிப் பார்க்கும் கனிவான முகத்தைக் கண்டு பரவசமானார்.

தன் உடலும், ஆன்மாவும் ஒரே வேளையில் தொடப்படுவதைப் பிரான்சிஸ் உணர்ந்தார். ஒரே சமயத்தில் தாங்க முடியாத வேதனையையும், அளவற்ற சந்தோசத்தையும் அவர் அனுபவித்தார். இந்த நெருக்கமான அனுபவம் காலம் கடந்த ஒரு நிலைக்குப் பிரான்சிஸை இட்டுச் சென்றது. அந்த காட்சி மறைந்த போது பரமனின் அன்பால் தன் இதயம் கொழுந்து விட்டு எரிவதைப் பிரான்சிஸ் உணர்ந்தார்.

அவர் தன் கைகளிலும், கால்களிலும், விலாவிலும் கிறிஸ்து இயேசுவின் காயங்களை அப்படியே பெற்றிருந்தார். அவை வெறும் தழும்புகள் அல்ல மிகுந்த வேதனையைக் கொடுக்கும் காயங்கள். தனது வாஞ்சையை அருளச் செய்த தேவனை துதித்துப்படியே தளர்ந்து போனவராக அவர் தன் காயங்களை மூடிக் கொண்டு சகோதரரிடம் திரும்பினார். மற்றவர்களிடம் அவர் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டாலும் சகோதர் லியோவிடம் மட்டுமே அவர் தன் காயங்களைக் காட்டிக்கொண்டார். ஏனென்றால் வேதனையைத் தணிக்க லியோ தான் கட்டுப்போட வேண்டியிருந்தது. பிரான்சிஸ் மரிக்கும் வரை இந்த பாடுகளின் வேதனை அவரைத் தொடர்ந்தது. என்றாலும் அவர் இறந்த பிறகு தான் மற்ற சகோதரர்கள் அந்தக் காயங்களைக் கண்டார்கள்.

அன்பு சகோதரமே அவரது ஆன்மீகத்தைப் பின்பற்றும் நாமும் அன்றாடச் சி லுவைகளை சுமப்போம், இறைவனின் மகிமையைக் காண்போம்.



**Sr. Maria Nesa Jacintha**
St. Mary's Convent, Avadi

# பணி நிறைவு வாழ்த்து
# அருட்சகோதரி. மேக்டலின் பாப்பாத்தி
# 22.08.2025



புனித வளனாரின் பிரான்சிஸ்கன் சபையெனும்
எழில்மிகு தோட்டத்தில் பூத்த அருள்மலரே!
இளஞ்சிட்டுக்கள் நடுவமர்ந்து இனிதாய் பணியாற்றி,
இதய நிறைவோடு ஓய்வு பெறும் உமை வாழ்த்த,
எண்ண அலைகளை எழுத்துக்களாய் வடித்துள்ளேன்....

அருட்கடலில் அகழ்ந்தெடுத்த முத்தே!
வளைந்தோடும் நதிகளும் வண்ண மலர்களும் நிறைந்த
கர்நாடக மாநிலத்தில் கம்பீர கோட்டை நகர் ரெய்ச்சூரில்
நேசமலர்கள் திரு.இலாசர், திருமதி.மரியபாக்கியம் இணையர்க்கு
நனிசிறந்த நான்காவது நல்முத்தாய் உதித்தீர்!
இதம் நிறை கனவோடு இறைபணியில் இன்பம் கண்டீர்!
தன் சகோதர குரு குழந்தைராஜ் உடன் இணைந்து இறைவழியில்
இமயம் தொட்டீர்! உமை வாழ்த்துகிறோம்!

இயேசு மரி சூசையின் எழில்மலரே!
மரியன்னையை அலங்கரித்து ஓராயிரம் மணிகளை
செபித்து, செபமாலை சூட்டும் செபமலரே!
இயேசுவாக வேடமிட்டு நற்போதனைகளை புதுமைகளை
நடித்து காட்டி பரவசமூட்டும் பக்திச்சுடரே!
இயற்கையை நேசித்த அண்ணல் அசிசியின் அருந்தவ புதல்வியே!
உம் பக்தியில் யாம் நனைகின்றோம்!

மெழுகாய் கரைந்திட்ட தியாகச்சுடரே!
கற்பாறையான மாணவர்களை சிலைகளாய் செதுக்கிய சிற்பியே!
அறியாமை இருளகற்றும் கலங்கரை விளக்கே!
ஏழை மாணவர்களின் ஏற்றமிகு ஏணியே!
மருத்துவர்கள், பொறியாளர்கள் இறைகுருக்கள்
என்று ஆன்றோரை உருவாக்கிய அறிவுக்களஞ்சியமே!
ஐந்தாண்டுகள் ஆசிரியராக, முப்பதாண்டுகள் தலைமையசிரியராக
பன்னிரெண்டு பணித்தளங்களில் பாங்குடன் பணியாற்றியவரே
உம் பணிகளை பாராட்டுகிறோம்!

பல்திறனோடு ஜொலிக்கும் இரத்தினமே!
பேச்சாற்றலில் திணறடிக்கும் ஆளுமையே!
நளினமான நடனத்தில் நாட்டிய பேரழகே!
கடின உழைப்பில் சுற்றித்திரியும் தேனியே!
இல்லம், பள்ளி, ஆலய அலங்கரிப்பில் அணி செய்பவரே!
உம் ஆற்றல்களை கண்டு வியக்கின்றோம்!

கல்வி கலைகளின் கலைமகளே!
ஆங்கில இலக்கியத்தில் முதுகலையும்!
தமிழ் இலக்கியத்தில் முனைவருமாகி!
பல கலைகளும் கற்று வித்தகியாகி,
வைரமாய் ஜொலிக்கின்றவரே!
பணிகள் செய்ய நீர் சளைத்ததும் இல்லை,
சோர்ந்து என்றும் களைத்ததும் இல்லை
அதிகம் உழைக்க சலித்ததும் இல்லை

அன்பு சகோதியே!
உம்பணிஓய்வு பணியின் முடிவல்ல,
தொய்வின்றி உழைத்த பணியின் நிறைவு!
நீர் நல்ல உடல் உள்ள நலமோடு வளமோடு,
நீடிய ஆயுளோடு இறையருள் ஆசீரோடு
பல்லாண்டுகள் இறைபணியை தொடர்ந்தாற்றிட
செபித்து வாழ்த்தும் அன்பு சகோதரிகள்...

---

## அசிசி நகர் அண்ணல் தூய பிரான்சிஸ்

**அ**சிசியில் தோன்றிய அண்ணலவர்
**ஆ**ன்மீக நெறி நின்ற நிர்மலனார்
**இ**யற்கையோடிணைந்தவராய்
**ஈ** முதல் எறும்பு பறவைகளும்
**உ**ரிமையோடு தோளில் அமர்ந்துமே
**ஊ**ரார் பாரோர் கண்டு வியந்திட
**எ**ல்லோர் இதயத்தையும் கவர்ந்தவராய்
**ஏ**ழ்மைக் கற்பு தூய மிகு துறவியராய்
**ஐ**யம் துளியு மில்லா நம்பிக்கை
**ஒ**ன்றாய் எல்லோரும் இருப்பாராக!
**ஓ**திட மாதிரிகை யான வராய்
**ஔ**வுடத மானார் உலகிற்கு
அ**ஃ**தே நமது வழியாகட்டுமே!



# நெய்தல் மலர்...

நெதர்லாந்து ஹாலந்து என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது. இரண்டும் வெவ்வேறா? அல்லது ஒரு நாடே இரண்டு பெயர்களால் அழைக்கப்படுகின்றதா என்ற குழப்பம் எப்போதும் ஏற்படுவதுண்டு. வரலாற்றைப் பார்க்கும் பொழுது, நெதர்லாந்து என்பது 12 மாகாணங்களை உள்ளடக்கிய நாடு முழுவதையும் குறிப்பது என்பதும் ஹாலந்து என்பது கடற்கரையின் ஓரமாக அமைந்துள்ள இரண்டு மாகாணங்களை மட்டும் குறிப்பது என்பதும் விளங்கிற்று. இது வட ஹாலந்து எனவும் மற்றது தென் ஹாலந்து எனவும் பெயர் பெறுகின்றன. இதிலும் சிறப்பாக ஆம்ஸ்டர்டாம், நாட்டர்டாம், ஹேர் ஆகிய நகரங்களைக் குறித்து நிற்கின்றது. காரணம் இம் மூன்றும் அரசியல் மற்றும் பொருளாதார நிலையில் பலரது கவனத்தை ஈர்த்திருந்ததேயாகும். நாளடைவில் இவ்விரு பெயர்களும் ஒரே நாட்டைக் குறிப்பதான வழக்கத்திற்கு மாறிப்போனது. 2020இல் இந்நாடு நெதர்லாந்து (நேவாநசடயனெ) என்ற பெயரைப் பெற்றது. இந்நாட்டின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம் ஆகும்.

நெதர்லாந்தின் நிலப்பகுதியில் 26% சதவிகிதம் கடல் மட்டத்திற்குக் கீழ் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 6.74 மீட்டர் தாழ்ந்துள்ளதால் “தாழ்நில அதிசயம்“ (Low land wonder) என்றே இதனைக் குறிப்பிடுவர். இக்காரணம் கருதியே நெதர்லாந்து பண்டைய காலக்கட்டத்தில் “தாழ்நிலம்“ என்றே அழைக்கப்பட்டது. ஸ்பானியர்களது ஆட்சியின் கீழ் இருந்து 1581இல் அதாவது 16 ஆம் நூற்றாண்டில்தான் இந்நாடு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றது.

1796இல் வடிவமைக்கப்பட்ட இவர்களது நாட்டுக் கொடி ஆரஞ்சு, வெள்ளை, மற்றும் நீலம் என மூவர்ணத்தைக் கொண்டு அமைந்துள்ளது. இதற்கான விளக்கம் தருமிடத்து ஆரஞ்சு தைரியத்தையும், உண்மைத் தன்மையையும், நம்பிக்கையையும் குறிக்கும் என்கின்றனர். எனவே தான் இவர்கள் தம் தேசிய நிறமாக ஆரஞ்சு நிறத்தையேக் கொண்டுள்ளனர். வெள்ளை அமைதியையும் நீலம் சமாதானத்தையும் குறிக்கும் என்கின்றனர். 17ஆம் நூற்றாண்டு வரை நாம் உண்ணும் கேரட் மஞ்சள் நிறத்திலும் வைலட் நிறத்திலும் தான் இருந்தது. ஆனால் இதனைத் தமது தேசிய நிறமான ஆரஞ்சு நிறத்திற்கு மாற்றிய பெருமை நெதர்லாந்து மக்களையே சாரும்.

Kingdom of Netherlands என்றுதான் இன்றளவும் இந்நாடு அழைக்கப்படுகின்றது. அரச குடும்பத்தின் வம்சாவளிகள் இந்நாட்டில் இன்றும் வாழ்கின்றனர். முக்கியமான முடிவுகள் இந்த அரச குடும்பத்தில் உள்ளவர்கள் ஒப்புதலின் பேரிலேயே எடுக்கப்படும். 42,000 கிலோ மீட்டர் பரப்பளவே கொண்ட இச்சிறிய நாட்டில் 1.75 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். ஐரோப்பாவிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இது திகழ்கின்றது.

உலகிலேயே மிக மகிழ்ச்சியாக உள்ள நாட்டு மக்களில் நெதர்லாந்தை சார்ந்தவர்கள் ஆறாவது இடத்தை வகிக்கின்றார்கள். மிக உயர்ந்த மனிதர்கள் இந்நாட்டைச் சார்ந்தவர்களே. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவர்கள். இவர்கள் சகிப்புத் தன்மை உடையவர்களாகவும் கடின உழைப்பாளிகளாகவும் இருப்பதைக் காண முடிகின்றது. வாழ்க்கைக்கும் பணிக்கும் சரியான இடத்தை வழங்குவதில் கைதேர்ந்தவர்கள். உதாரணமாக மாலை 5 மணிக்குமேல் வேலை பார்க்க மாட்டார்கள். வார இறுதி நாட்களில் குடும்பத்துடன் மகிழ்சியாக செலவழிப்பதை தவிர்க்கமாட்டார்கள். தனிப்பட்ட வாழ்க்கை என்பது அர்ப்பணிப்போடும், திட்டமிட்டும் அமைந்திருக்கின்றது. இம்மக்கள் டச்சு மொழியைப் பேசுபவர்கள் என்றபோதும் 90 சதவிகித மக்கள் ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்களாக

உள்ளனர். வடக்குப் பகுதியில் வசிப்பவர்கள் பிரிசியன் (Frisian) என்ற மொழியையும் பேசுபவர்களாக உள்ளனர்.

இந்நாடு ஏரிகள், ஆறுகள், காடுகள், புல்வெளிகள் மற்றும் கால்வாய்களினால் நிறைந்து காணப்படுகின்ற மிக அழகிய நகரமாகும். கீதோர்ன் (Giethoorn) என்ற நிலப்பகுதி மாயக் கதை நகரம் (Fairy Tale City) என்று அழைக்கப்படுகின்றது. இங்கு காற்று மாசு என்பதே கிடையாது. காரணம் இந்த ஊருக்குள் காரோ பைக்கோ எதுவும் செல்ல அனுமதியில்லை. கால்நடையாக நடந்து செல்ல வேண்டும் அல்லது துடுப்பு உள்ள படகில் பயணித்துச் செல்ல வேண்டும். அந்த அளவுக்கு இன்றளவும் இந்நகரின் தூய்மையை இவர்கள் பாதுகாக்கின்றனர்.

17ஆவது நூற்றாண்டிலேயே வர்த்தக பரிவர்த்தனையினை (Stock Market) தொடங்கி வைத்து வெற்றியும் கண்டனர். ராட்டர்டாம் என்ற ஊரில் மிகப்பெரிய துறைமுகம் உள்ளது. யூரோ போர்ட் (Euro Port) என அழைக்கப்படும் ஐரோப்பாவின் மிகப் பெரிய வர்த்தக இடமாக இது உள்ளது.

டச்சு கிழக்கிந்திய கம்பெனி என்ற ஒன்றை வர்த்தகத்திற்காகத் தொடங்கினர். இதில் இவர்கள் முதலிடத்தை வகித்தனர். இதற்காக இவர்கள் கட்டிய கோட்டைகளை இன்றளவும் இங்கு காண முடிகின்றது. இதன்வழி இவர்கள் முன்னமேயே இந்தியாவோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அறியலாம். கியூக்னா:.ப் என்ற ஊரில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை டியூலிப் மலர்கள் பல வண்ணங்களில் திட்டமிடப்பட்டு பயிரிடப்பட்டு உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. (Tulip Mania) மீன்பிடி தொழிலிலும் (Fishery Industry) இவர்கள் முதலிடத்தை வகித்தனர். விவசாயம், (Agriculture) கட்டுமாணப்பணிகள் (Engineering) மின்னனு உற்பத்தி (CD, DVD, Blue ray Electronics) போன்றவற்றில் உயர் தொழில் நுட்பம் அறிந்தவர்களாகவும் முதலிடத்தை இன்றுவரை தக்கவைத்தும் வருகின்றனர்.

காற்றாலைகள், சூரிய வெப்பத்தை மின்சாரமாக மாற்றுதல் (Wind Mills, Solar Panel) போன்றவற்றிற்கு இவர்களே முன்னோடிகள். பல கார்ப்பரேட் நிறுவனங்கள் இங்குதான் தொடங்கப்பட்டுள்ளன. உதாரணமாக (Shell, Unilever, Philips, KLM Airlines, IKEA home furnishing, Heineken Beer) போன்றவற்றைக் குறிப்பிடலாம். ரொட்டி சீஸ், வெண்ணெய் போன்ற பால் பொருட்களும் இவர்களால் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இத்தனை சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இம் மக்கள் சைக்கிளில் பயணம் செய்வதையே அதிகம் விரும்புகின்றனர். இந்நாட்டின் பிரதம மந்திரியே தமது அலுவலகத்திற்கு சைக்கிளில் செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளார். வீதிகளில் அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பெறுகின்றது. இவர்களுக்கான தனி பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. இதனை Bike என்றே இவர்கள் அழைக்கின்றனர். இந்நாட்டின் மக்கள் தொகையை விட இந்த பைக்கின் எண்ணிக்கை அதிகம். இங்கு முதல் மரியாதை சைக்கிளுக்குத்தான்.

நெய்தல் மலரும்....

**Sr. Margaret Bastin**
St. Louis Convent



# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## SEPTEMBER

2025

2nd Sr. Jency

4th Sr. Josphine Divya Bharthi

5th Sr. S. Selva Mary
Sr. Velankanni Jeyachithra
Sr. Amala Arockia Rani

7th Sr. Marthal Arockia Rani

8th Sr. Arockia Mary Jeeva
Sr. Jarald Arockia Kirija

9th Sr. Anu Priya

10th Sr. Anbarasi
Sr. G. Selvi Sagayarani

11th Sr. Mary Eucharista
Sr. Amala Anusuya

12th Sr. A. Velankanni

15th Sr. Mary Crescentia
Sr. Alphonse Rani

16th Sr. Siriya Pushpam

17th Sr. Barbarammal
Sr. Jeya Sutha

18th Sr. A. Stella Mary

19th Sr. Daisy Indira Mary

20th Sr. Asha
Sr. Soruba Rani

21st Sr. Arockia Anusiya

24th Sr. Rita Balaiah

25th Sr. Reeta Thivya

26th Sr. Emelda Leema Rose

28th Sr. A. Lilly Mary

29th Sr. Magdalane Soosappu
Sr. Margaret Durairaj
Sr. Esther Rani




*Be happy & Stay blessed*

# Beloved Sisters...



## Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Philomina | 01.09.1946 |
| Sr. Mary Annuncia | 05.09.2020 |
| Sr. Mary Borgia | 07.09.2017 |
| Sr. Mary Ruffina | 08.09.2000 |
| Sr. A. Leema Rose | 10.09.2020 |
| Sr. Mary Bakkiam | 11.09.2010 |
| Sr. Mary Margret | 12.09.2024 |
| Sr. Mary Laticia | 13.09.2024 |
| Sr. Mary Getrude (S.G.V) | 16.09.1937 |
| Sr. Mary Justina | 16.09.2021 |
| Sr. Mary Leoini | 17.09.2024 |
| Sr. Irudhya Mary | 18.09.2018 |
| Sr. Mary Margaret | 20.09.1952 |
| Sr. Mary Jane | 22.09.2021 |
| Sr. Mary Joan of Arc | 23.09.2004 |
| Sr. Mary Pascal | 26.09.1993 |
| Sr. Mary Faustina | 26.09.2016 |
| Sr. Mary Felix | 29.09.2020 |
| Sr. Mary Angela | 30.09.1931 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

*வேண்டுகோள்!*



"**உறவே நீ பேசு**" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 74 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## நம் தந்தை அசிசியின் ஐந்து காய வரம் பெற்ற விழா மற்றும் ஆரோக்கிய அன்னையின் பிறந்த நாள் திருவிழா நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*



Installation of St. Mary's Vice Province



Aelen Home for the Aged - Madurai Blessing



Retirement Function



Blessing of a Renovated St. Joseph Working Women's Hostel, Maraimalai Nagar


நீயே ஆசியாக விளங்குவாய்
(தொ.நூல் 12:2)
HAPPY FEAST
DEAR MOTHER